# தளபதியிடம் கன்னத்தில் அறையும் பைத்தியம் என்ற பட்டமும் வாங்கியவள்

ஆர்க்கின் தமக்கை பிரான்சு நாட்டின் ஊர் ஒன்றில் வாழ்ந்து வந்தாள். ஆர்க்கின் போக்கு அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது அவள் தனது சிற்றாருக்கு ஆர்க்கை அழைத்தாள். ஆர்க்கும் தமக்கையிடம் சென்றாள். அங்கு சென்று சில நாட்கள் இருந்தபின் அவள் தன் தமக்கையின் கணவரை நோக்கிப் பின்வருமாறு சொன்னாள்.

"பிரான்சு நாடு தற்போது போரில் சிக்கித் தவிக்கிறது. ஆங்கிலேயர் படையெடுப்பால் பிரான்சு நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இன்றைய இக்கட்டான நிலையிலிருந்து பிரான்சு நாட்டைக் காப்பாற்றப் பெண் ஒருத்தியால் தான் முடியும். அந்தப் பெண்தான் நான் என்னை இந்நாட்டு அரசனிடம் அழைத்துச்செல்லுங்கள். நான் அரசனுக்கு ஆண்டவனின் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அவரது ஆணையைப் பெற்றுப் பகைவரை விரட்டுவேன். தயவு செய்து அரசனிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்றாள்.

ஆர்க் அடிக்கடி இப்படி வேண்டினாள். சிறுமிக்குச் சித்தப்பிரமை பிடித்துவிட்டதென அவள் நினைத்தாள். அவள் வேண்டுகோளை அவள் அலட்சியம் செய்தாள். தனது தணியாத தாகத்தை அவள் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்தாள். முயற்சி திருவினையாக்கும். முயற்சி இன்மை இன்மை புகுத்திவிடும். அவளது தொந்தரவு சகிக்கமுடியாமல் கடைசியில் படைத்தலைவன் முன் ஆர்க் அழைத்துச் செல்லப்பட்டாள்.

ஆர்க் படைத்தலைவன் முன் சிரந்தாழ்த்தி வணங்கினாள். 'படைத்தலைவரே இந்த ஆண்டு நடுப்பகுதிவரை அரசர் போர் தொடங்கக் கூடாது இது சத்திய

### புத்தொளி

வாக்கு அப்படிப் போர் தொடங்கினால் தோல்வி மேல் தோல்வி தான் கிடைக்கும் சிறிது காலம் போக ஆண்டவன் அவருக்குத் துணை புரிவார் அதன் பின்னர் தான் நமது அரசர் வெற்றி பெறுவார். வெற்றி பெற்ற பின்னர் அரசனை நான் ரீம்ஸ் நகரிலுள்ள ஆலயத்திற்கு அழைத்துச் சென்று முடிசூட்ட வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளையாகும்" என்று தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாள்

படைத்தலைவன் எதற்கும் அஞ்சாதவன் ஆர்க்கின் பேச்சைக் கேட்டு அச்சமடைந்தான். ஆழ்ந்த சிந்தனையின் பின்னர் படைத்தலைவன் ஆர்க்கைப் பார்த்துக் கேட்டான். யார் அந்த ஆண்டவன்? என் கடவுள் தான்.

உன் கடவுளை எப்படிக் கண்டாய்? கண் முன் ஒளியாகக் கண்டேன். கடவுள் தான் இப்படிச் சொன்னாரா? ஆம் அவர்தான் இப்படிச் சொன்னார் உனக்கு மூளைக்கோளாறு போல் இருக்கிறது! இல்லை இல்லை. எனக்கு மூளைக் கோளாறு இல்லை. உன்னத்தின் தெளிவு, உணர்வின் ஒளி எனக்கு இருக்கிறது

படைத்தலைவன் வாய் விட்டுச் சிரித்தான். அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது அவன் வீட்டில் காலத்தைக் கழித்தாள்.

அங்கு பலவித வேலைகளை அலுக்காது சளைக்காது செய்து வந்தாள் ஆர்க். அவ் வீட்டுக்கு ஆர்க் சந்தித்த படைத்தலைவன் ரொபேட் சென்றான். சீமாட்டி வீட்டில் ஆர்க் வேலை செய்வதையும் அவள் சுறுசுறுப்பையும் அவதானித்த ரொபேட் ஆலயம் ஒன்றிற்குச் சென்று அங்கிருந்த குருவானவரைச் சந்தித்து ஆர்க்கின் போக்கை விமர்சித்தான். இவள் ஒரு மாயக்காரி என்பதில் சந்தேகமில்லை என்றும் சொன்னான்.

> **பிரான்சில் வரலாறு படைத்த வீராங்கனை ஜோன் ஒவ் ஆர்க் (2)**

ஆர்க்கின் போக்கில் வெறுப்புற்றான். ஆர்க்கின் கன்னத்தில் அறைந்து "பைத்தியமே! இந்த இடத்தை விட்டு ஓடிப்போ இங்கு நிற்காதே" எனக் கர்ச்சித்தான் படைத்தலைவனின் கோபக்குறிகண்டு அவனுடன் மீண்டும் பேச்சுக் கொடுக்காது ஆர்க் தமக்கையிடம் திரும்பிச்சென்றாள். அங்கிருந்த ஆர்க் காதலின் என்னும் சீமாட்டி ஒருத்தியின் ஆதரவுடன் அவளுக்கிருக்கும் பைத்தியத்தை ஒழித்துவிட செபிக்குமாறும் வேண்டினாள்.

இதனைக் கேட்ட ஆர்க் மண்டியிட்டு குருவின் முன் முழந்தாளிட்டு "குருவே நான் மாயக்காரியுமல்ல; பைத்தியக்காரியும் அல்ல நாட்டின் மீது நான் வைத்திருக்கும் அன்பே என்னை வாட்டி வதைக்கின்றது நீங்கள் வேண்டுமானால் என்னைச் சோதித்துப் பாருங்கள். நான் நாட்டுக்காகப் போராட வந்திருப்பவள். சிறுமி என்றும் சிறுக்கி என்றும் என்னை எள்ளி ஒதுக்கி விடாதீர்கள் என்றாள்.

ஒரு சிறிது நேரம் அவளை உற்று நோக்கினார் மலர்ந்த முகமும், தெய்வீகக்களையும், தேசபக்தியும் அவரைக் கவர்ந்திருந்தன. அவர் படைத்தலைவனைப் பார்த்து இவள் மாயக்காரியோ பைத்தியக்காரியோ அல்லள் இவள் பிரெஞ்சு நாட்டை மீட்க வந்த வீராங்கனை. விடுதலைத் தேவதை" என்று ஒருவித ஆவேசத்தோடும் உணர்ச்சியோடும் தெரிவித்தார்.

குருவானவர் சொன்ன வார்த்தைகள் நம்பிக்கையான வார்த்தைகளாக இருந்தன. இதனைக் கேட்ட ஆர்க் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள் குருமுன் சிரம் தாழ்த்தி வணங்கினாள் படைத்தலைவனுக்கும் ஆர்க்கின் எண்ணத்தில் அரைகுறை நம்பிக்கை ஏற்பட்டது. குருவுடன் சில நிமிடங்கள் அந்தரங்கமாகப் பேசினான். குரு ஆர்க்கின் மனோ உறுதியிலும், மண்ணின் தேசத்திலும் சந்தேகிக்க வேண்டாம் அவளைப் படைத்தலைவன் எப்படியாவது அரசன் முன் அழைத்துச் செல்ல வேண்டுமென்று விளம்பினார்.

படைத்தலைவனுக்கும் சிறிதுசிறிதாக நம்பிக்கை வளர்ந்தது. குருவைப் பார்த்த படைத்தலைவன் "இவளை எப்படியும் அரசன் முன் நிறுத்துவேன்" என வாக்களித்தான்.

படைத்தலைவன் இவ்வாறு கூறியதைக் கேட்ட ஆர்க் தன்னால் புரியாது குதித்துக் கூத்தாடினாள். அரசன் முன் சென்றதும் தன்னை அரசன் நாட்டுக்காகப் போரிட அனுமதிப்பான் என்று எண்ணினாள். குருவானவரைப் பலதடவை வணங்கிய ஆர்க் படைத்தலைவன் ரொபேட்டின் காலடியில் வீழ்ந்தும் வணங்கினாள்.

வார்மக்கள் ஆர்க்கிற்கு குணுடை தந்தனர் படைவீரன் ஆர்க்கிற்கு வாளொன்றைப் பரிசளித்து "வெற்றி உண்டாகுக" என வாழ்த்துக் கூறினான்.

(தொடரும்)

# எத்தனை இழப்புக்கள் ஏற்பட்டாலும் இறுதிவரை போராடியே தீருவோம்

> இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பொழுது அப்போதைய பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆற்றிய எழுச்சிமிகு உரைத் தொடரின் மூன்றாவது அங்கம் இங்கு வெளியாகிறது.

"சேடான் நகரில் பிரஞ்சுப் படைகளின் தற்காப்பு அணி நிலைகுலைந்துவிட்டது. பிரிட்டிஷ்-பிராஞ்சுப்படைகள் பின்வாங்கியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஆனால் பெல்ஜிய நாட்டு மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க அந்நாட்டுக்குள் சென்று நிலைகொள்ள வேண்டியிருந்தது. ஆனால் ஜேர்மனி மூர்க்கத்தனமாகத் தாக்கிக்கொண்டு முன்னேறிவிட்டது எமக்கும் பிரெஞ்சுப்படைக்கும் இடையே உணவு, ஆயுத விநியோகம் ஆகியவற்றுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஜேர்மனியர்கள் தங்கள் நாட்டில் சுதந்திரம் சுகவாழ்வு என்பவற்றை அறியாதவர்கள், மற்றையநாட்டிலும் மிகவும் எதேச்சாதிகார ஆக்கிரமத்துடனும் நடந்துகொள்கிறார்கள்.

டன்கேர்க் நகரை எதிரிகள் அடைந்துவிட்டார்கள். பொலோன், கலேயில் போன்ற நகரங்களில் பயங்கர யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான்கு நாட்களாக மரணப்போராட்டத்தை நடாத்தி சரணடைய வைக்கும்படியான கோரிக்கையை நிராகரித்து கலேயிஸ் நகரைக் காப்பாற்றி விட்டார்கள் எமது வீரர்கள். டன்கேர்க் துறைமுகம் மட்டுமே எமக்கு திறந்திருக்கிறது. துறைமுகப் பகுதியைப்பொட்டி எமது படை பின்வாங்கியிருக்கிறது பெல்ஜிய, பிரான்சு, பிரிட்டிஷ் படைகள் அனைத்தும் சுற்றிவளைக்கப்பட்டு ஆகாயத் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது.

பெல்ஜியத்தில் ஜேர்மனியர் ஊடுருவல் செய்தபோது அந்நாட்டு மன்னனின்வேண்டுதலுக்கிணங்க நாம் சென்று காப்பாற்றினோம். எனினும் கடைசிநேரத்தில் எமக்கு எவ்வித அறிவிப்புமின்றி பெல்ஜிய மன்னன் ஜேர்மனியரிடம் சரணாகதியடைந்து விட்டார். இந்த முடிவு மிக துரதிஷ்டமானதாகும். எல்லாப் பக்கத்திலும் இருந்து தாக்கப்படுகிறோம். முக்கியமாக ஆகாயத்தாக்குதல் முழுமூச்சாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, டன்கேர்க் துறைமுகத்தின் மூலமே நாம் வெளியேறக்கூடியதாயிருக்கிறது

காயப்பட்டவர்களையும், போர்வீரர்களையும் வெளியேற்றுவதற்கு றோயல் கடற்படை அதிகளவில் ஈடுபட்டிருக்கிறது. எமது மருத்துவக் கப்பல்களையே இலக்காகக்கொண்டு நாஜி விமானங்கள் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் எமது றோயல் விமானப்படையும் நடவடிக்கைகளில் இறங்கிவிட்டது இந்த யுத்தம் மிகவும் தாமதப்படுத்துவதாயும், கொடூரமானதாக இருந்த போதும் சடுதியாக காட்சி மாறிவிட்டது. வீழ்ச்சியும், அதிர்ச்சியும் ஒரு நொடிப்பொழுதில் மறைந்துவிட்டது இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வீரர்கள் உறுதிப்பாட்டாலும், கட்டுப்

### சரணாகதியடைய ஒரு நிமிடமேனும் தயாரில்லை என்றவர் சேர்ச்சில்

பாட்டாலும், மாசற்ற சேவையாலும், விவேகத்தாலும். விலைபோகமுடியாத தேசபக்தியாலும், அதிசயமான வெற்றியைக் காணமுடிந்தது களத்தைவிட்டு அகன்று விடுவதால் வெற்றி படையமுடியாது. உறுதியான உள்ளுணர்வோடு போராடுவதன் மூலம் தான் வெற்றிபெற முடியும் இந்த மகத்தான வெற்றிக்கு எமது விமானப் படையின் உறுதியான தன்னலமற்ற தாய் நாட்டுச் சேவையே அடித்தளமாக அமைந்திருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தரைப்படையின் இழப்பு மிகவும் மோசமானது 30 000 வீரர்கள் காயப்பட்டோ, காணாமற்போயோ, இறந்துவிட்டார்கள். இத்துடன் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் இழந்துவிட்டோம் வீரசொர்க்கம் அடைந்தவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்து அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். எமது ஆயுத இழப்பை ஈடு செய்வதற்கு எமது தொழிற் கூடங்களில் வாரநாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை நடைபெறுகிறது! தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் தமது லாபங்களைத் தியாகம் செய்து உரிமைகளையும் மரபுகளையும் மறந்து தேசிய சேவையில் ஈடுபடுவதினால் இன்னும் சில மாதங்களில் வேண்டிய ஆயுதங்களை உற்பத்தி செய்துவிடுவார்கள்.

பெல்ஜியத்தில் நடைபெற்றது மிகவும் பிரமாண்டமான இராணுவ விபத்தாகும். அடுத்த தாக்குதல் எம்மீது (இங்கிலாந்து) தான் நடைபெறப்போகிறது. 'இங்கிலாந்தில் இன்னும் சொற்ப கிழமைகள்தான் உண்டு பிடிக்கவிடலாம்' என ஹிட்லர் கூறியதாக அறிகிறேன். எமது தீவின் தற்காப்பு நிலைப் பலப்படுத்த வேண்டும். எந்நேரமும் எதையும் சமாளிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் பாராளுமன்றத்தின் சகல இராணுவ இரகசியங்களையும் வெளியிட முடியாது எனினும் சில முடிபுகளை பாராளுமன்றத்தில் அறிவிக்கவேண்டியுள்ளது உறுப்பினர்கள் விரும்பினால் "பாராளுமன்றத்தின் இரகசிய அமர்வு" ஒன்று ஏற்படுத்தப்படும். உறுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழில்: - ஊரெழு க. முத்துக்குமாரசுவாமி

# சிறைச்சாலை வந்த பின் வேதாந்தம் பேசிய கைதி

### ஒரு கைதியின் கதை

வில்வம் பசுபதி

கொக்கலையில் உள்ள திறந்தவெளிச் சிறைச்சாலையில் அமைந்துள்ள பல்வேறு தொழிலகங்களில் கைதிகள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த வேளையில் எனது கவனம் அங்குள்ள சிறிய முருகன் கோவிலின் முன் படிக்கட்டில் அமைதியாக இருந்து பூமாலை கட்டிக் கொண்டிருந்த கைதியின் பக்கம் சென்றது.

அவனது பெயர் ஆறுமுகம் எனக் கூறிய சிறைச்சாலை அதிகாரி, அவன் ஆயுட் கைதி என்றும் கோவிலுடனேயே தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டான் என்றும் சொன்னார்.

கோவிலை நோக்கிச் சென்றேன் நெற்றியில் விபூதிப்பட்டை, சந்தனப் பொட்டுடன் சாமியார் போல் காட்சியளித்தான் கைதி ஆறுமுகம்.

கோவிலை மூன்று முறை வலம் வந்து கும்பிட்டேன். ஆறுமுகம் ஓடி வந்து விபூதி சந்தனம் தந்தவாறே "கோவில் எப்படி ஐயா இருக்கு" என்றான்.

"நான் தமிழன் என்று எப்படித் தெரியும்" என்றேன்

'ஐயா, கோவிலை வேடிக்கை பார்க்காமல் மூன்று முறை சுற்றிய போதே நினைச்சேன் அது மட்டுமில்லை உங்கள் முகமே தமிழனென்று காட்டிக் கொடுக்குதே" என்றும் சொன்னான்.

"அது சரி ஆறுமுகம் கோவிற்தொண்டைத் தவிர வேறு வேலை தரப் படவில்லையா"

"என்ரை பெயர் ஆறுமுகம் எப்படி ஐயா தெரியும்."

'ஆறுமுகப் பெருமானுக்குத் தொண்டு செய்பவன் ஆறுமுகமாகத் தான் இருக்கும்' என்றேன்

ஆறுமுகம் சிரித்தான். 'நான் ஒரு கேள்வி கேட்கப் போறேன் கோவிப்பீயா" என்று ஆரம்பித்தேன்

'ஐயா என்ன கேள்வி கேட்கப் போறீங்களெனத் தெரியும் சாமியார் போல இருக்கும் நான் எப்படிப் படுகொலையைச் செய்தேன் என்று கேட்கப் போறீங்க'

'சரியாகச் சொல்லிட்டாயே' ஐயா அன்றைக்கு நான் அவளைக் கொல்லாவிடில் அவள் என்னைக் கொன்றிருப்பாள். 'நான் செய்த கொலையை நியாயப் படுத்தவில்லை. கடவுள் படைத்த உயிரை எடுக்க உரிமை இல்லை ஐயா எனக்கு, இப்போ பிராயச்சித்தம் செய்கிறேன்'—

அவன் கூறிய கதை சோகமானது.

ஆறுமுகம் தனியார் கடை ஒன்றில் விற்பனையாளராக வேலை பார்த்தான். அவனது குறைந்த வருமானத்துடன் அவன் மனைவி கமலா மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்தினாள். அமைதியும், அன்பும் நிறைந்த அவர்கள் வாழ்வில் சூறாவளி போல் பூச்சி என்று அழைக்கப்படும் பூலோகசிங்கம் வந்து புகுந்தான். பூச்சி அந்த ஊர் சண்டியன். கொலை கொள்ளைக்கு அஞ்சாதவன் அவன் மேல் உள்ள அச்சத்தினால் அந்த ஊரே அவனிடம் தனி மரியாதை காட்டியது.

வீட்டிற்குத் தேவையான பொருட்களை கமலா, கணவன் ஆறுமுகம் வேலைசெய்யும் கடையில் வாங்குவது வழக்கம் ஒருநாள் கமலா கடையில் பொருட்கள் வாங்கி வரும்போது பூச்சி வழியில் எதிர்ப்பட்டான். கடை நிறைய இருந்த பொருட்களின் மேல் தீப்பெட்டியும் இருப்பதை கவனித்த பூச்சி தீப்பெட்டியை எடுத்து பீடி ஒன்றைப் பற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)



தரகர்: அப்ப வரைப் பெண் வீட்டுச் சீதனம் எல்லாம் சரிதானே.

மாப்பிள்ளை வீட்டார் சீதனம் எல்லாம் சரி தான் தரகர். ஆனால் பொம்பிளை வீட்டில் பதுங்குகுழியும் கட்டாயம் இருக்க வேண்டும்.

- நல்லூரான் -

## சஞ்சீவி கவிதைக் கதம்பம்

### தூரமும் துயரமும்

எங்கள் வானத்தில்
எட்டாத தூரத்தில்
வேகமாய்ப் பறக்கும்
வெளிநாட்டுப் பறவைகள்
திட்டமிட்டு
வட்டமிட்டு
எச்சமிடும்
மிச்சமின்றி
மனிதர்களையும்
கனிமரங்களையும்
உருக்குலைத்து
உயிர் பறிக்கும்.

—நுணுவில் நாகராஜா

★ ★ ★

### மணமகள் தரும் சீதனம்

கூந்தலிலே மல்லிகை மொட்டு
நெற்றியிலே குங்குமப் பொட்டு
இடையினிலே காஞ்சிப்பட்டு
உடல்முழுக்க நகைநட்டு
சீரான உடற் கட்டு
குரலிலே ஒரு மெட்டு
பார்வையிலே சிறு வெட்டு
பதினாறு வயதுச் சிட்டு
இவை மணமகளுக்குச் சீதனம்.

—ரங்கநாதன்

★ ★ ★

### ஆறடி நிலம்

வருடங்களை மறந்து
வாழ்க்கையை
நடத்திவிட்டோம்
ஆருடங்கள்
எல்லாம்
பொய்யாய்ப்போக...
தெருவோரங்களில்
நின்று
இன்னும்
"ரேஸ் பேப்பர்களை"
பிடித்துக்கொண்டு
"செவன்" சரண்டுகிறோம்.
மிச்சமாய்
ஒன்றுமில்லை
எங்களுக்கென்று
இருப்பதெல்லாம்
இந்த தேசத்தில்
ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள
ஆறடி நிலமே!...

—ஈழகணேஷ்

★ ★ ★

### ஒரு சபதம்

மட்டுநகர் திருமலையில் மாற்றான் செய்யும்
மாபெரும் கொடுமைகளை மண்ணிலெங்கும்
எட்டாமல் புதைக்கின்ற 'லங்கா புவத்தை'
எப்படித்தான் மறந்திடுவோம்!
இளமைக்காலம்
வட்டமிட்டுச் சிறாடிக்கும் கிட்டுப்போல
வளர்பெறவே தினம் கனவில் மூழ்குமெங்கள்
சிட்டுக்களின் கற்பினையே பறிக்குமந்தப்
பாவியரைக் கொன்றொழிக்க ஒன்று சேர்வோம்!
சுற்றிவர 'பொம்மர்'...சுடலைகளாய்
மாற்றிடினும்...
சுதந்திரத்தின் தாகமெல்லாம் வற்றிடுமோ!
முற்றிவிட்ட விடுதலையின் மௌனகீதம்...
முடிந்திடுமோ 'ஹெலி'ச் சூட்டால்!
மேதினியில்
வெற்றியினை நாமடையும் வேளையிலே; மண்ணில்
வற்றிவிட்ட நன்னீரில் செங்குருதி பாயும்!
புற்றினிலே பாம்பைப்போல் ஈழத் தன்னில்
புகுந்துவிட்ட விஷமிகளை விரட்டிக்கொல்வோம்!

—மு. வே. யோ. வாஞ்சிநாதன்

★ ★ ★

### நாட்டுக்கு உழைத்தால் என்ன?

வீர சுதந்திரம் என்று சொல்வது
வெற்று வார்த்தையல்ல!
நூறு பல ஆயிரம் பேர்கள் மடிவதில்
ஏதும் புதுமையில்லை
பாரதப் போரினில் பாண்டவர் ஐவரும்
பட்டதை நாம் அறிவோம்!
நூறு பேராய் நின்று தொல்லை புரிந்தவர்
நின்று மடிந்ததும் நாம் அறிவோம்

ஆண்ட பரம்பரை ஆண்டிகளாய் அன்று
அலைந்ததை நாம் அறிவோம்
வேண்டும் வரம்தர வேந்தன் இருந்தமே
வேதனை கள் அறிவோம்
நீண்ட துயர் பல சேர்ந்தும் அவர் மனம்
சோர்ந்ததை நாம் அறியோம்
மீண்டும் அவர் அரசாள முடிந்ததை
வேதம் என்றே உணர்வோம்

கோழைகளாய்த் தினம் நூறு தடவைகள்
சாவதில் லாபமென்ன!
நாளை அழிந்திடும் நாற்ற உடல் இது
நாட்டுக் குழைத்தாலென்ன?
தோழர்களே ஒன்று சேருங்கள் எக்ஸோர்
சங்கொலி கேட்குதடா!
தோல்விகள் நாம் வெற்றித் தேரின் முதற்படி
என்றே ஒலிக்குதடா.

—கே. கே. மதிவதனன்

★ ★ ★

### பெண் விடுதலை

கவிதைகள் பல எழுதி
கற்பனைகளில் மாண்டோம்!
தமிழுக்கு விடுதலையாம்
பெண்ணுக்கு விடுதலையாம்
யாரிங்கு தருவார்கள்
நமக்கு நம் விடுதலையை!
சமுதாயம் முதல்
தனக்கு விடுதலை தேடட்டும்
பின்னர் யோசிப்போம்
பெண் விடுதலையைப்பற்றி!

—எம். கே. சாந்தி

# பிஜித் தீவில் புதிய நெருக்கடி; இந்திய அரசுக்கு மற்றுமொரு ஸ்ரீலங்கா!

- தெற்கு மா கடலுக்கு நடுவினிலே,
அங்கொர் கண்ணற்ற தீவினிலே
தனிக் காட்டினிற் பெண்கள்
புழுங்குகின்றார் — அந்தக் கரும்புத்
தோட்டத்திலே
எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் மகாகவி பாரதியார் பாடினார்.

அந்தக் கண்ணற்ற தீவுதான் இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. அந்தீவு தான் பிஜி.

தென் பசுபிக் சமுத்திரத்திலே மிதக்கும் தீவுக் கூட்டங்களிலே ஒன்று பிஜி. தென்னிந்தியாவில் இருந்து கூலிகளாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர் பட்ட கஷ்டத்தைத்தான் அன்று பாரதி 'கரும்புத் தோட்டத்திலே' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பாடினான்.

தமிழனைச் சாருகப் பிழிந்து இன்றைய நவீன பிஜியை உருவாக்கிய அந்தக் 'கூலிப் பட்டாளம்' இன்று ஆளும் வர்க்கமாக மாறுவதா?

இந்தக் காழ்ப்புணர்ச்சியிலே எழுந்ததுதான் பிஜியின் இராணுவப் புரட்சி.

பிஜியின் பழங்குடிகள் 'மண்ணின் மைந்தன், உரிமை பற்றிப் பேசத் தொடங்கியுள்ளனர்.

காட்டை, கரும்புத் தோட்டங்களாக்கி பிஜிக்கு என்றொரு பொருளாதாரத்தை உருவாக்கியவர்கள்; அவர்கள் தான் மண்ணை வளமாக்கியவர்கள்.

'மண்ணின் மைந்தர்'களுக்குள்ள உரிமை, மண்ணை வளம்படுத்திய வருக்கு இல்லையா?— இந்தக் கேள்வியும் பிஜிப் பிரச்சினையில் எழுப்பப் படுகின்றது.

ஆம் தேயிலைத் தோட்டத்திலே எழுந்த பிரச்சினை, இன்று கரும்புத் தோட்டத்திலே எழுந்துள்ளது.

இந்துமா கடலில் இலங்கை. தென்பசுபிக்கில் பிஜி.

தேயிலைத் தோட்டங்களை உருவாக்க இங்கு கொண்டு வரப்பட்டவர்கள் இந்தியத் தமிழர்கள். அழைத்து வந்தவர்கள் பிரிட்டிஷார்.

இலங்கை மண்ணை வளப்படுத்த அப்போது மண்ணின் மைந்தர்கள் முன்வரவில்லை.

பிரிட்டிஷார் ஆட்சியின் கீழ் அந்தவ இந்தியத் தமிழருக்கும் வாக்குரிமை இருந்தது. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. நாடாளு மன்றத்திற்கு தோட்டப் பகுதிகளில் இருந்து எழு இந்தியத் தமிழர் எம்பிக்களாகத் தெரிவாகினர்.

இப்படியே விட்டால் மலைநாடு அவர்கள் கைகளில் போய்விடுமே என்று எண்ணிய 'மண்ணின் மைந்தர்கள்' அவர்களின் பிரசா உரிமையை ரத்துச் செய்தனர். நாடற்றவர்களாக்கினர். கப்பலில் ஏற்றினர். கள்ளத் தோணிகள் என்ற பட்டமும் சூட்டினர்.

வரலாறு

இந்தச் சாயல் தான் சுமார் 40 ஆண்டுகள் கழிந்து பிஜியில் இன்று தென்பட ஆரம்பித்துள்ளது.

$7\frac{1}{2}$ லட்சம் மக்கள் தொகை கொண்ட பிஜியில் 48 சதவீதத்தினர் இந்தியர்கள். சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூலிப் பட்டாளமாக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களின் வாரிசுகள்.

பூர்வீகக் குடிகள் எல்போரின் தொகை 46 சதவீதமாகும்.

1970 வரை பிஜி, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது.

1970இல் பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்கினர். பிரச்சினைக்குரியதாகக் கருதப்படும் இன்றைய அரசமைப்புச் சட்டம் அக்டோபர் 1970 இல் நடைமுறைக்கு வந்தது.

மண்ணின் மைந்தர்களுக்கு மட்டுமல்ல, அதனை வளமாக்கியவர்களுக்கும் நாட்டின் நிர்வாகத்தில் இடமளித்தது.

-தீபன் ராஜா-

அந்த அரசமைப்பு. ஒரு நபருக்கு ஒருவாக்கு என்ற முறையில் தேர்தல் நடைபெற்று வந்தது.

கூலிப்பட்டாளமாக வந்தவர்கள் ஆளும் வர்க்கமாகவும் மாறினர். இது பூர்வீகக் குடிகளுக்குப் பிடிக்கவில்லை. சிறுசிறிதாக வெறுப்பு பரவத் தொடங்கியது.

1982 பொதுத் தேர்தலின்போதுதான் முதன் முறையாக இந்த வெறுப்பு பகிரங்கமாகியது.

இந்திய வெறுப்பு உணர்வு

"உள்நாட்டு விஷயத்தில் இந்தியத்தூதர் தலையிடுகிறார். மாஸ்கோவிடம் இருந்து நிதிபெற்று இந்தியர்களுக்கு வழங்குகின்றார்."— இப்படி முன்னாள் பிரதமரான மாரு 1982 தேர்தலில் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டினார்.

இந்த மாரு என்பவர்தான் 1970இல் இருந்து 1987ஏப்ரல் வரை ஆட்சி மாறுமல் பிரதமராக இருந்து வந்தவர்.

1982 தேர்தலில் திரு. மாரு பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியது அன்றைய பிரதமர் இந்திராகாந்திக்குப் பிடிக்கவில்லை.

பிராந்திய காமன்வெல்த் மாநாடு ஒன்று அந்த ஆண்டில் பிஜியில் நடைபெறவிருந்தது. அந்த மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டேன்"— என்று திருமதி. இந்திரா காந்தி மறுத்து விட்டார்.

அப்போது இருந்து இந்திய எதிர்ப்பு உணர்ச்சி பிஜியில் வெளியாக தெரியத் தொடங்கியது. தொடர்ந்து பிஜி இந்தியர்கள் தனி அமைப்பாக இயங்கத் தொடங்கினர்.

இதனிடையில் கடந்த ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தி நியூஸிலாந்து பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

வெலிங்டன் சென்ற அவரை, பிஜியில் இருந்து வந்த இந்தியர்கள் உணர்ச்சிரமாக வரவேற்றனர்.

தங்கள் முதாதையர் நாட்டுப்பிரதமர் என்று உணர்ச்சிவசப்பட்டனர். ஒரு கட்டத்தில் திரு.



ராஜீவ்காந்தியைசூழ்ந்து நின்று இந்திய தேசிய கீதமான 'ஜனகணமன...' வையும் பாடிவிட்டார்கள்.

பிஜியில் பரவி வந்த இந்திய எதிர்ப்பு உணர்வு கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

இதன் மத்தியில் சென்ற மாதம் நடந்த தேர்தலின் முடிவு இந்தியர்களின் கைகளுக்கு அதிகாரம் போகக்கூடியதாக அமைந்து விட்டது.

அதன் விளைவுதான் அண்மையில் இந்திய எதிர்ப்பு உணர்வுடன் நடத்தப்பட்ட இராணுவப் புரட்சி. புரட்சி வெளிப்படையில் புல்வாணம் போல்தான் தெரிகிறது. உண்மை அதுவல்ல.

புரட்சியின் நோக்கம் நிறைவேறக்கூடிய விதத்தில்தான் பிஜியின் மகாதேசாதிபதி, இராணுவ அதிகாரி, பழங்குடித் தலைவர்கள் ஆகியோர் சேர்ந்து காரியம் பார்க்கின்றார்கள்.

புதிய அரசியல் அமைப்பு

இந்தியர்களுக்கு அதிகாரம் போகாத முறையிலான புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

அதற்கான குழுவிற்குத் தலைவர், புரட்சியை நடத்திய இராணுவ அதிகாரி ரபுக்கா.

புதிய அரசியல் சட்டம் எப்படி அமையும்?

சனத்தொகையில் அரைப்பங்குக்கு கூடுதலாக இந்தியர்கள் வாக்குரிமையுடன் இருக்கும் வரை அவர்கள் அதிகாரம் பெறுவதைத் தடுக்க முடியாதே.

அப்படியானால் இலங்கை போன்று பிஜியிலும் பிரசா உரிமைச் சட்டம் கொண்டுவரப் படவேண்டும்.

முன்னர் இலங்கை, இப்போது பிஜியா? என்ற கேள்வி இந்திய வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

கட்டிக் கொண்டு போனவர்கள், குடியமர்த்தியவர்கள், உரிமை களை வழங்கியவர்களே பிரிட்டிஷார் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் இப்படி அவமானப் படுவது குறித்து இந்தியா என்ன செய்யப்போகிறது?

பிஜி. இன்று இந்தியாவுக்கும் பிரிட்டிஷாருக்கும் சவாலாக அமைந்து விட்டது.

இந்தியர்களை அவமானப் படுத்துவது இந்தியாவை அவமானப்படுத்துவதற்குச் சமம்-இப்படி கடந்த வியாழன் இரவு இந்திய வானொலியில் பேசுகையில் பிரபல அரசியல் விமர்சகர் ரஞ்சன் குப்தா தெரிவித்தார்.


இதனிடையில் லண்டன் டைம்ஸ் நாளிதழ் தனது வியாழன் ஆசிரியர் தலையங்கத்தில் பிஜியின் நிலையை இலங்கையுடன் ஒப்பிட்டு எழுதி யது.

"பிஜியில் இந்தியர்கள் பராபட்சமாக நடத்தப்படின், ஒதுக்கப்படின் ஸ்ரீலங்காவின் தற்போதைய நிலைதான் பிஜியிலும் ஏற்படும்"— லண்டன் டைம்ஸின் காலம் அறிந்த எழுதிய ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு அம்சம் இது.

பிஜி எங்குபோய் நிற்குமோ? ★

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 68



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..................

..................

வயது: ..................

விலாசம் ..................

..................

ஒப்பம். ..................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| ... ரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக செயற்படுபவர் | 1. பாக்கியவதி |
| 5. ஐம்புலன் உணர்ச்சிகளில் ஒன்று | 2. கடவுள் |
| 7 ஏகபத்தினி விரதன் | 3 விஷ்ணு |
| 9. கால் | 4. பிணிகளுள் ஒன்று |
| 10. சூல் | 6. திருடன் |
| 11. வித்தை | 8. இல்லாள் |
| 13. வானத்தில் சஞ்சரிப்பவன் | 11. நல்கு பழுத்தல் |
| 15. சிவனை வணங்குபவன் | 12. சக்திப் பிரவாகம் |
| 18. அளவான | 14. இறைச்சி |
| 19. கரைவதால் உருவாகுவது | 16. ஆராதனை |
| 21. ஒரு வகை விளையாட்டு இந்தியாவில் பிரசித்தமானது | 17. சோறுடன் சேர்ப்பது. தலைகீழாய்க் கிடக்கிறது. |
| 22. சிவனுக்கு முருகன் உபதேசித்த பரமரகசியம் | 20. நேரம். மாறியுள்ளது |
| 23. பூவுக்கு முந்தியது | 21. இனிமைப்பட உரைத்தல் அடிக்கடி குறைவது |

### சொற்சிலம்பம் போட்டி இல. 66 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சதுரங்கசேனை 5. மதி 7. சிவம் 9. நல 10. வைது 11. மப்பு 12. வைகல் 15 வைகோ 18. வலிமை 19. புல்வகை 21. மயல 22. இம் 23. நிறம் | 1. சஞ்சிகை 2. ரவி 3. தமகம் 4. சேர 6. விவசாயி 8. வதுவை 11. மல்லிகை 12 மிகை 14. கவளம் 16. கேடயம் 17. குபு 20. விநி 21. மற |

### சொற்சிலம்பம் போட்டி இல. 66 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வி. ஜயந்தி தியாகராஜா, சரசாலை மேற்கு, வேலணை.

இரண்டாம்பரிசு:- செல்வி. தி தேவகி, தடுவன் பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

மூன்றும் பரிசு:- திரு. K. S இராமநாதன், பிரதானவீதி, பண்டத்தரிப்பு.

★ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

# நீத்தார் புகழாரம்

## 'அரும் பெரும் ஆசான்'

சுன்னை நகர் புலவர்கள் அவதரித்த நகராகும். வரதபண்டிதர், முருகேசபண்டிதர், மாணிக்கத்தியாகராஜ பண்டிதர், குமாரசுவாமிப் புலவர் இன்னும் பாவலர் பலர் தோன்றிப் புகழிட்டிய நன்நகராகும். இவர்களின் ஆத்மா சக இலக்கிய சிந்தனைகளில் தோன்றியவர் அமரர் க. நாகலிங்கம் அவர்கள். அன்னார் வித்துவ சிரோமணி



பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களிடம் இலக்கியம், இலக்கணம் சமய சாஸ்திரம் என்பனவற்றைக் கற்றுக் கற்றார். தமிழிலே புலமை வாய்ந்த பண்டிதரு மாவார்.

மலைபோன்ற தோற்றம், அகன்ற நெற்றி, புனிதமான உடை, கம்பீரமான நடை, குழந்தைபுன்னம், தாய்மையான மனம், அஞ்சா நெஞ்சம், களங்கமிலாப் புன்சிரிப்பு, அன்பும் பண்பும் பிரதிபலிக்கும் கவிய விழிகள் இவை எல்லாம் ஒருங்கே திரண்ட உத்தமர் தான் அமரர் நாகலிங்கம் அவர்கள்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலே ஆசிரியப் பயிற்சி பெற்று 1931 ம் ஆண்டு மயிலணி சைவ வித்தியாசாலையில் தமது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். சுன்னாகம் மேற்கிலுள்ள பிள்ளைகள் சைவச்சூழலில் கல்வி கற்கப் பாடசாலை இல்லாத குறையாய்ப் போக்கும் நிவர்த்தி செய்யும் பொருட்டு தமது சொந்தக்காணியில் 1940 ஆம் ஆண்டு ஒரு பாடசாலையை நிறுவினார். அதுதான் நன்கு இயங்கும் நாகேஸ்வரி வித்தியாசாலை ஆகும். அவர் இப்பாடசாலையில் பல்லாண்டு அதிபராகக் கடமை புரிந்து மாணவர்களை நல்வழிப்படுத்தியவர். அனேக மாணவர்கள் இவரிடமிருந்து இலக்கணம், இலக்கியம் கற்று பிரவேச பண்டிதர் பாலபண்டிதர் பரீட்சைகளில் சித்தி பெற்றுத் தேறினர்.

சைவநூல்களை ஐயந்திரிபுறக் கற்றுத் தேர்ந்தவர். வீரசைவர் கடவுளன்பர், ஆசாரசீலர், ஜீவகாருண்ய சீலர், திருவாக ஆற்றல் முகாமைத் தலத்திறன் இன்னும் மாணவர் கல்வி வளர்ச்சியில் தனது தனிப்பட்ட வாழ்க்கையையும் அர்ப்பண மதித்த அரும் பெரும் ஆசான். வாழ்நாள் முழுதும் சைவநற் தொண்டும் செந்தமிழ்த் தொண்டும் செய்து புகழ் பெற்ற பெருமையாளர்.

ஏற்ற இறக்கங்களால் நிலை தளம்பாது நாணய மாகச் சொல்லும் செயலும் திறம்பாது கடமை உணர்வோடு உரிமைகளை விட்டுக் கொடுக்காது நேர்வழியில் நம்பிக்கை கொண்டு உயர்ந்திட்ட ஓர் உத்தமன். சுன்னை ஐயனார் பெருமானின் அருள் நிரம்பப் பெற்றவர். இனிய தன் குரலிலே தேனூறும் பக்திப் பாடல்களை பாடுவதைக் கண்டோரும் கேட்டோரும் மகுடியில் மயங்கும் நாகம்போல நிற்பர். அந்தகைய இன்குரலை தெய்வப் பணிக்கே அர்ப்பணம் செய்தார்.

அவர் மரணத்தால் நிரம்பக் ஈடு செய்ய முடியாத இழப்பால் தவிக்கும் அமரர் நாகலிங்கம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக! ★

- தி. மாணிக்கவாசகர்

# சுற்றுப்போட்டிகளை நடாத்தமுன் போதிய பயிற்சி வழங்கவேண்டும்

## பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் ஆலோசனை

ஒரு விளையாட்டு வீரனுக்குக்கடின உழைப்பும், மனவுறுதியும் மிக மிக அவசியம், பயிற்சி இல்லாமல் ஒரு பூரண நிலையை விளையாட்டு வீரர்கள் அடையமுடியாது.

இவ்வாறு உதைபந்தாட்டத் துறையில் அகில இலங்கை ரீதியிலும், உதைபந்தாட்டம் கிரிக்கெட் துறைகளில் சென்னை நகரிலும் புகழ் பெற்ற முன்னாள் விளையாட்டு வீரரான ஓய்வு பெற்ற பலாலி பயிற்சிக் கல்லூரி அதிபருமான திரு இ. கனகலிங்கம் சஞ்சீவிக்கு அளித்த செய்தியில் கூறினார் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

1941 ஆம் ஆண்டு எனது 16ஆவது வயதிலேயே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 20 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்ட அணியில் விளையாடத்தொடங்கினேன்.

அந்த வருடம் யாழ், இந்துக்கல்லூரி அணி முதன்முறையாக யாழ் மாவட்டப் பாடசாலை சாம்பியனாகத் தெரிவானது.

நான் விளையாடிய இரண்டு வருடங்களிலும் யாழ் இந்து அணியே சாம்பியனானமை எனக்கு அன்று பெருமை தந்தது.

1943, 1944ஆம் ஆண்டுகளில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக்குழு அணியில் விளையாடினேன்.

1945 ஆம் ஆண்டு சென்னை கிறிஸ்தவக் கல்லூரி அணியிலும் 1946, 1947, 1948, 1949ஆம் ஆண்டுகளில் சென்னை பல்கலைக்கழக அணியிலும் விளையாடினேன். அகில இந்திய உதைபந்தாட்ட அணியின் பதில் கோல் காப்பாளராகவும் நான் தெரிவுசெய்யப்பட்டேன்.

1945 ஆம் ஆண்டில் சென்னை கிறிஸ்தவ கல்லூரி கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளராகவும் விளையாடினேன்.

1950ஆம் ஆண்டு யாழ் மாவட்ட தெரிவுக்குழுவிலும் கோல்காப்பாளராக



ராக விளையாடினேன்.

இலங்கை மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் முதலாவது பிரிவில் சித்தியடைந்து 1969-1970 ஆம் ஆண்டுகளில் இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தலைவராகவும் சங்கத்தலைவராக இருக்கின்றேன்.

18 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றி அனைத்துப் பாடசாலைகளிலும் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக இருந்தேன்.

பின்னர் 17 வருடங்கள் அதிபராகவும் 6 வருடங்கள் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபராகவும் கடமையாற்றி 1985 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றேன்.

ஒருகுழு ஆடும்பொழுது ஒருவரும் தனிப்பட்ட சாதனைகள் பற்றி நினைக்கூடப் பார்க்கமுடியாது

சென்னையில் கிறிஸ்தவக் கல்லூரி அணியில் அகில இந்திய புகழ் பெற்ற வீரர்களான என். கண்ணுபிரம், ஆர். எம். பெருமாள், சி. டி. கோபிநாத் ஆகியோருடன் கிரிக்கெட் ஆடியது எனக்கு மிகவும் பெருமையை ஏற்படுத்தியது.

அகில இந்திய பல்கலைக்கழக அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் சென்னை பல்கலைக்கழக அணியின் வரலாற்றில், முதன்முதலா பஞ்சாப் பல்கலைக்கழக அணியைத் தோற்கடித்த அகில இந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

விளையாட்டுத் துறை

செவ்வி: சண். ஜோன்சன்

கடமையாற்றினேன்

1970 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை யாழ் மாவட்ட மத்தியஸ்தர்

## யாழ்ப்பாணத்து விவசாயி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

படும் பெட்டிகளுக்கேற்ற பணமும் சீராகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை.

பதட்டநிலை

குரும்பசிட்டி இழக்கு வசாவிளானைச் சேர்ந்த சிவசம்பு தம்பித்துரையை சந்திக்கிறேன் இராணுவ கெடுபிடிகளால் வீடு வாசல்களைத் தோட்டங்களை இழந்த அகதியாகியுள்ள அவர் தமது சோக அனுபவத்தைப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

இராணுவத்தினர் எமது பகுதிக்கு வந்துள்ளமையால், 3000 கன்று வாழைத்தோட்டம் 2000 கன்று மிளகாய்த்தோட்டம், வெங்காயத்தோட்டம் ஆகியவற்றைக் கைவிட்டு வந்துள்ளேன்.

வெங்காயம் செய்கை பண்ணி, கொட்டிலில் கட்டி வைத்திருந்தோம். இராணுவம் வருவதை அறிந்து அவசரமாக அவற்றை அறுத்து பிடிபிடியாக தூக்கிக் கொண்டு ஓடிவந்தோம். மிளகாய் கன்றுகள் கடசரியாக முற்றும் நிலையில் கேரோடு பிடுங்கிக் கொண்டு ஓடிவந்து விட்டோம். வாழைத்தோட்டத்தை எதுவும் செய்ய முடியவில்லை ஒரு குலை மட்டுமே வெட்ட முடிந்தது. ஏனைய வாழைகளை இராணுவத்தினர் வெட்டி வெளியாக்கிவிட்டனர். எமக்கு 20,000 ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மீண்டும் அங்கு சென்று விட்டில் இருந்து தோட்டத்தை கவனிப்பீர்களா என கேட்டதற்கு தம்பித்துரையின் மனைவி மங்களேஸ்வரி பின்வருமாறு கூறுகிறார். பிரச்சினைகள் தீர்ந்து குரும்பசிட்டி ... வரை அப்பக்கம் போக மாட்டோம். ★

## உள்ளம் ஆன்மா...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

மாகிய அழகென்பது எதைக் குறிக்கின்றது? ஒரு நாட்டினர் அழகு வாய்ந்தது எனக் கூறும் ஒரு பொருளைப் பிறிதொரு நாட்டினர் அவ்வாறு கருதாது விடுகின்றனர். இவ்வாறாகவே, அழகு என்பதைப் பற்றிக் காலந்தோறும் நாடு தோறும் வேற்றுமைக் கருத்தே கொள்ளப்படுகின்றது.

உண்மை என்னும் நிலையான ஒன்று உள்ளது அந்த உண்மையினின்று தோற்றும் அழகே ஆங்கிலத்தில் Beauty எனவும் சமஸ்கிருதத்தில் 'ரஷம்' எனவும் கூறப்படுகின்றன. ... அழகு, ... என்ற ... பண்டைக் ... பொழுதே கலை வாழ்வு சிறப்புடையதாகும் என்று பண்டைக் கிரேக்கரும் சத்தியம், சிவம், சுந்தரம் சேர்ந்த ஒன்றே தெய்வீகம் என்று பண்டைய இந்துக்களும் கொள்வதை நோக்கும் பொழுது இருசாராரும் ஒத்தொரு முடிவிற்கே வந்துள்ளனர் என்றே கொள்ளத் தோன்றும்.

கிழக்கும் மேற்கும்

கண்ணுக்குப் புலனாகும் உலகிலிருந்து தமது கலை மூலங்களை மேற்குநாட்டார் கொள்ள கண்ணுக்குப் புலனாகாத ஆன்மீக இறைதத்துவங்களினூடாகக் கலை மூலங்களைக் கிழக்கு நாட்டார் தேடலாயினர். இக்காரணத்தாலே இவ்விருசாராருக் கலைகளுக்கிடையேயும் வெவ்வேறு போக்குகள் காணப்படுவது தவிர்க்க முடியாததாகும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நீராடி மகிழ நேர்த்தியான ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள்
1 பைக்கற் -/50 சதம் மட்டுமே.
இது ஓர் மில்க் வைற் தயாரிப்பு



# சஞ்சீவி

23 - 05 - 1987 சனிக்கிழமை



யோகாசனமும் புனிதக் கலை அது மனிதனைப் பூரணமாக்குவது





2 மில்க்வைற் பார்சோப்மேலுறைகள் அல்லது 10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அனுப்பி யோகாசனப் புத்தகம், விளக்கப் படம், மற்றும் கிரிக்கர்களையும் பெற்றுக் கொள்ளலாம் -மில்க்வைற் யாழ்ப்பாணம்




ஜி. எஸ். நேசகுமார் (சிறந்த துடுப்பாட்ட வீரர்)



எஸ் பி. பிரபானந்தன் (சிறந்த பந்து வீச்சாளர்)



கே. பத்மபிரகாஷ் (சிறந்த பந்து தடுப்பாளர்)



ரி. சஞ்சீவன் (சிறந்த பல்துறை வீரர்)

# வடக்கின் சிறந்த கிரிக்கெட் அணி யாழ். சென் ஜோன்ஸ் தெரிவு

## நேசன், பிரபா, பிரகாஷ், சஞ்சீவன் சிறந்த வீரர்களாகினர்

உதயன்- சஞ்சீவி ஆதரவில் யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும், யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய யாழ்ப்பாணப் பாடசாலைகளின் சிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரர், திறமையான கிரிக்கெட் அணி ஆகிய தெரிவுகளின் முடிவுகளை இத்தால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுகிறது.

போட்டிக்குழுவினால் நியமிக்கப்பட்ட நடுவர் குழு தனது தீர்ப்புக்களை பின்வருமாறு வழங்கியுள்ளது:

### சென் ஜோன்ஸ் சிறப்பு அணி

✶ யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி யாழ்ப்பாணத்தின் முன்னணி அணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அணியினர் ஆடிய ஐந்து ஆட்டங்களில் மூன்றில் வெற்றிபெற்றனர்.

மற்றைய இரு ஆட்டங்களும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன எனினும் அந்த இரண்டு ஆட்டங்களிலும் சென் ஜோன்ஸ் அணி முடிவடைந்த முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் எதிர்த்து விளையாடிய அணியைவிட கூடுதல் ஓட்டங்களைப் பெற்றது.

சென் ஜோன்ஸ் அணி விளையாடிய ஒரு ஆட்டத்தில் 300 க்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் 3 போட்டிகளில் 200 க்கு மேற்பட்ட ஓட்டங்களையும் பெற்றது.

மேற்படி அணியில் இருந்தே சிறந்த பல்துறை வீரர், சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### துடுப்பாட்ட வீரர் நேசகுமார்

சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்- ஜோன்ஸ் கல்லூரி அணியின் வீரர் ஜி-எஸ்- நேசகுமார் தெரிவாகியுள்ளார்-

சென் ஜோன்ஸ் அணியின் சார்பில் இவர் மூன்று போட்டிகளில் மட்டும் கலந்து கொண்டார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும்--

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும் பெற்றார்.

4 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய இவர் மொத்தம் 182 ஓட்டங்களைப் பெற்றார். அவற்றில் இரண்டில் இவர் ஆட்டமிழக்கவில்லை.

### பந்துவீச்சாளர் பிரபானந்தன்

யாழ். இந்துக் கல்லூரி அணியின் ஆரம்ப அதிவேகப் பந்து வீச்சாளர் எஸ். பி. பிரபானந்தன் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவானார்.

5 போட்டிகளில் மொத்தம் 34 விக்கெட்டுக்களை இவர் கைப்பற்றியுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி ஒரே ஆட்டத்தில் 14 விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனையைப் பெற்றார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் ஒரு இன்னிங்ஸில் இவர் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

சராசரியாக ஒரு விக்கெட்டைக் கைப்பற்ற 9 91 ஓட்டங்களை மட்டுமே கொடுத்த இவர், வடக்கின் பிரபல்யமான கிரிக்கெட் வீரராகவும் ரசிகர்களினால் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

### பந்து தடுப்பாளர் பத்மபிரகாஷ்

சிறந்த பந்துத் தடுப்பு வீரனாக யாழ் இந்துக் கல்லூரி அணியின் விக்கட் காப்பாளர் கே. பத்மபிரகாஷ் தெரிவாகியுள்ளார்.

யாழ் இந்து அணிக்காக ஐந்து போட்டிகளில் கலந்து கொண்ட பத்மபிரகாஷ் 15 'காட்சு'களைப் பிடித்தும், 4 பேரை 'ஸ்டம்ப்' முறையிலும் மொத்தமாக 19 பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

இத்துடன் இவர் ஆடிய ஐந்து போட்டிகளிலும் 86 உதிரி ஓட்டங்களையே விட்டுக் கொடுத்துள்ளார்.

### பல்துறை வீரர் சஞ்சீவன்

ரி. சஞ்சீவன் சிறந்த பல்துறை வீரராகத் தெரிவாகியுள்ளார்.

இவர் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஆரம்ப பந்து வீச்சாளர்.

துடுப்பாட்டத்தில் 4 போட்டிகளில் 6 இன்னிங்ஸில் மொத்தம் 181 ஓட்டங்களைப் பெற்றார். இவர் எடுத்த ஆகக்கூடுதலான ஓட்டங்கள் 68. இது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிராகப் பெறப்பட்டது.

ஒரு இன்னிங்ஸில் சராசரியாக 65 5 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

பந்து வீச்சில் ஐந்து போட்டிகளில் இவர் 82 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இரண்டு இன்னிங்ஸ்களில் தலா 5 விக்கெட்டுக்களையும், மூன்று இன்னிங்ஸ்களில் தலா 4 விக்கெட்டுக்களையும் இவர் கைப்பற்றினார்.

சராசரியாக ஒரு விக்கெட்டுக்கு 8.21 ஓட்டங்கள் மட்டுமே இவர் கொடுத்துள்ளார்.

மொத்தமாக 10 'காட்சு'க்களையும் இவர் பிடித்துள்ளார்.

திருவாளர்கள் இ. லிங்கலிங்கம், டி. ஆர் அருமைநாயகம், எஸ். எம் வி திசநாயகம், எஸ் பூபாலசிங்கம், எஸ் உமாகாந்தன் ஆகியோரைக் கொண்ட நடுவர் குழுவே இந்த வீரர்களைத் தெரிவு செய்தது.

தொகுப்பு:- சண் ஜோன்சன்

## சென்ஜோன்ஸ் கல்லூரி அணி



# இலங்கைக்கு நிதிஉதவி அளிக்க வேண்டாம்

## உதவும் நாடுகளிடம் ஈழத் தமிழர் தகவல் நிலையம் வேண்டுகோள்

லண்டன், மே 23

இலங்கை அரசுக்கு நிதி உதவி அளிக்க வேண்டாம் என்று உதவும் நாடுகள் அமைப்புக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஈழத்தமிழர் தகவல் நிலையம் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இலங்கை அரசு உண்மையான அக்கறை காட்டவில்லை.

இராணுவத் தீர்விலேயே அது தீவிரம் காட்டுகின்றது. பேச்சுக்கள்மூலம் அமைதித்தீர்வு ஒன்றைக் காண இந்திய அரசு மேற்கொண்டுவந்த மத்தியஸ்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துவிட்டன.

உதவும் நாடுகளின்ஆலோசனைக்கும் இலங்கை அரசு மதிப்பு அளிப்பதாக இல்லை.

இருக்கும் வழி ஒன்றே ஒன்றுதான். இலங்கைக்கு நிதிஉதவி வழங்கும் நாடுகள் அந்த நிதி உதவியை உடனே நிறுத்த வேண்டும்.

நீங்கள் வழங்கும் உதவிகள் அபிவிருத்திக்காக இலங்கை அரசினால் செலவிடப்படவில்லை. தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான ஆயுதங்களை வாங்கவே இலங்கை அரசு அப்பணத்தைச் செலவிடுகிறது. பல்வேறு அமைச்சுக்களும் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் பணத்தில் ஒரு பகுதியை இராணுவ நடவடிக்கைகளுக்கே ஒதுக்கி வருகின்றன.

தமிழர்மீதான அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. இக்கைச் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் தெளிவாக விளக்குகின்றன.

இப்படித் தமிழர் தகவல்நிலையம் இலங்கைக்கு உதவும் நாடுகளுக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் அமைப்பின் கூட்டம் அடுத்த மாதம் 15ஆம் திகதி பாரிஸில் நடைபெற இருப்பது தெரிந்ததே. (இ-ஏ)

## அச்சுவேலிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அலைகின்றனர்

வானொலியின் 'எப் எம்' அலைவரிசையை மேற்கோள்காட்டி சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

வியாழக்கிழமை இரவு அச்சுவேலிப் பகுதியில் பரப்பப்பட்ட ஒரு வதந்தியால் பல குடும்பங்கள் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் அதிகாலை 5 மணிவரை எதிர்பார்த்து விழித்திருந்தன என்று கூறப்படுகிறது.

நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு இரவிரவாக வெளியேறி அயல் கிராமங்களில் இரவைக் கழித்தன. (இ-11)

## புதுவாழ்வு - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலது குறைந்தோர்களை தேசிய நீரோட்டத்தாக சேர்த்து அவர்களுக்கு புது வாழ்வளிக்க வேண்டும். அவர்களும் சமூகத்தில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

## பிஜி விவகாரம்:

# 3 நாடுகளுக்கு அமைச்சர்களை அனுப்புகிறார் ராஜீவ்

புதுடில்லி, மே 23

பிஜியில் உள்ள இந்தியர்களின் எதிர் காலம் குறித்து பிரிட்டன், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் அவசரப்பேச்சுக்களை நடத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இதன்படி இரண்டு வெளியுறவு இணை அமைச்சர்களை பிரதமர் காந்தி சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இணை அமைச்சர் எட்வாடோ பலீரோ,எதிர்வரும் திங்கட்கிழமை மெல்போர்னில் பிரதமர் பொப்ஹோக்குடன் பேச்சுக்கள் நடத்துவார்.

இணை அமைச்சர் நட்வர் சிங் லண்டன் சென்று பிரிட்டிஷ் அமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்துவார்

பிஜி பிரச்சினைக்கு இந்திய அரசு முன்னுரிமை கொடுத்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

இதனிடையே பிஜியில் பதினெட்டுப் பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மாறு, பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்ரா, அவரின் உதவியாளர் ஆகியோரும் இந்த அமைச்சரவையில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். (இ-ஏ)

## தமிழகத்தில்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அமைதித் தீர்வு காணும் இந்தியாவின் நல்லெண்ண உதவிகளுக்கு இது தடையாக இருக்கிறது.

மத்தியஸ்த முயற்சியில் இந்தியா மீது அவநம்பிக்கை ஏற்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது-

இப்படி வெளிநாட்டு விவகார அமைச்சர் அனுப் சாகுல் ஹமீட திரு பூரியிடம் ஸ்ரீலங்கா அரசின் கடும் ஆட்சேபத்தையும், கண்டனத்தையும் வெளியிட்டார். (அ-ஏ)

## சுற்றும்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

திய சாம்பியனானது என்னால் மறக்கமுடியாத சம்பவம்.

பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சென்னை பல்கலைக்கழக அணிக்காக நான் ஆடிய முதல் மூன்று வருடங்களும் சேர். அஸ்ரஸ் முகர்ஜி கேடயத்தை சுவீகரித்தோம்.

ஆனாலும் எனது இறுதி வருட ஆட்டத்தில் மைசூர் பல்கலைக்கழக அணியிடம் கேடயத்தை கோட்டைவிட்டது எனக்கு ஆழ்ந்த கவலை தந்த சம்பவமாகும்.

விளையாட்டுத்துறையில் எனக்கு உற்சாகம் ஊட்டி என்னை ஸ்திரப்படுத்தியவர் எனது சகோதரரான இ. சபாலிங்கம்.

இன்றைய அணிகள் 2 வாரகால பயிற்சியுடன் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்கின்றன. சுற்றுப்போட்டிகளே இந்த அணிகளுக்கு பயிற்சி ஆட்டங்களாக அமைகின்றன.

எந்த ஒரு விளையாட்டையும் ஒரு தவணைக்குள் உட்படுத்தக்கூடாது.

குறைந்தது இரண்டு தவணைகளாவது ஒரு போட்டியை நடத்த வேண்டும்

முதலாவது தவணையில் பயிற்சியளித்து இரண்டாவது தவணையில் சுற்றுப்போட்டிகளை நடத்த வேண்டும்.

இந்த அடிப்படையில் வீரர்களுக்கு பயிற்சி அளித்தால் வீரர்கள் முன்னேற வாய்ப்புண்டு

கடின உழைப்பும்,மன உறுதியும் விளையாட்டு வீரனுக்கு மிகவும் அவசியம்

எந்த ஒரு வீரனும் போதிய பயிற்சியில்லாமல் ஒரு பூரண நிலையைப் பெற்றுக்கொள்ளமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். ✶


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி:23-05-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd., at 392/3, Navalar Road, Jaffna on Saturday May 23, 1987


## நிஜ மனிதனைக் கொன்ற இயந்திர மனிதன்

டோக்கியோ, மே 23

இயந்திர மனிதன் ரோபோ அடுத்தடுத்து நிஜமனிதர்கள் சிலரை, ஜப்பானில் கொன்று விட்டது.

இதன் மர்மம் பற்றி ஆராய ஜப்பான் அதிகாரிகள் விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளனர் (இ-ஏ)

## பவித்ராவுக்கு நியூஸிலாந்து தூதரகம் புகலிடம்

பிஜியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்ராவுக்கும் அவரின் ஆதரவாளர் சிலருக்கும் சுவாவில் உள்ள நியூஸிலாந்து தூதரகத்தில் புகலிடம் அளிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை ஆக்லிலாந்து பிரதமர் டேவிட் லாங்கே நேற்று வெலிங்டனில் வெளியிட்டார். (இ-ஏ)

# இனப்பிரச்சினைமேலும் சிக்கலாகிவிட்டது

## அமைச்சர் திவாரி கூறுகிறார்

புதுடில்லி, மே 23

இலங்கை இனப்பிரச்சினை மேலும் சிக்கலாகியுள்ளது.

வெளியுறவு அமைச்சர் நாராயண் தத் திவாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிய, நடுத்தர பத்திரிகை உரிமையாளர் கள்மாநாட்டில் அமைச்சர் கடந்த வியாழன் பேசினார்.

பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் மேலும்சொன்னார்.

கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றது. (இ-ஏ)

## விருது பெற்ற தமிழர்

தேசிய வீரர்கள் நினைவு தினத்தை ஒட்டி 40 பிரமுகர்களுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று விருதுகள் வழங்கினார்.

ஐந்து பேருக்கு ஆக உயர்ந்த விருதான தேசமான்ய விருது வழங்கப்பட்டது.

ஐந்து பேரில் ஒருவர் தமிழர். அவர் பெயர் திரு. வைத்திலிங்கம் மாணிக்கவாசகர் முன்னாள் நீதியரசரான இவர் யாழ் பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் பணியாற்றியவர். (இ-ஏ)

## நகரில்...!

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நேற்று பயங்கர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பகல் பதினொருமணியளவில் முகாமில் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் சத்திரத்துச் சந்தி, கடற்கரை வீதி, நூலகப் பக்கம், ஜும்மா பள்ளிவாசல் லேன் ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இருவர் காயமடைந்தனர். பல வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 21-05-87ஆம் திகதிய மாற்று விகிதமாகும்).

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 47. 75 |
| அமெ. டாலர் | 28. 88 |
| இந்திய ரூபா | 2.17 |
| ஜேர்மன் மார்க் | 16. 05 |
| கனடா டாலர் | 21. 82 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 79 |
| பிராங் (சுவிஸ்) | 19. 33 |
| அவுஸ். டாலர் | 20 33 |
| சிங்கப்பூர் டாலர் | 13.40 |
| நோர்வே குரோனர் | 8 64 |
| ஜப்பான் யென் | 2.05 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org